19.11.2025

O.S.No. 208/2024

PW1–சவரியம்மாள் – க/பெ. தோபியாஸ்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 19.11.2025

குறுக்கு விசாரணை : ( 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில்)

1. எனது கணவர் பெயர் தோபியாஸ் என்றால் சரிதான். எனது மாமனாரின் பெயர் அந்தோணி. எனது மாமனாருக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். முதல்மனைவி பெயர் பட்டத்தி. பட்டத்திக்கும் எனது மாமானருக்கும் ஒரே மகன் லூர்து மட்டுமே. வேறு குழந்தைகள் கிடையாது. எனது கணவருடன் உடன்பிறந்தவர்கள் 2 ஆண்மக்கள், 2 பெண்மக்கள்.

2. வழக்கு சொத்து எனது கணவரின் கிரைய சொத்து இல்லை என்றால் சரிதான். அது எனது மாமனார் வழி வந்தசொத்து என்றால் சரிதான். எனது கணவர் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். எனது கணவருடன் உடன்பிறந்த சகோதரராகிய ஜானும் இறந்துவிட்டார். மேலும் மாமனாரின் மூத்த தாரத்தின் மகனான லூர்தும் இறந்துவிட்டார். மஞ்சுளா எனது கணவரின் சகோதரி மகள். லூர்தின் வாரிசுகள் எங்களது ஊரில் வசித்துவருகிறார்கள் என்றால் சரிதான்.

3. எனது மாமனார் மூலம் கிடைத்த சொத்தைதான் நான் வீடுகட்டி குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். அதே இடத்தில்தான் பிரதிவாதியும் வீடுகட்டிவிட்டார் என்றால் சரிதான் அதில் தற்போது நடைபாதையை மறித்துவிட்டார்கள். நான் ஜானிடம் அனுமதி கேட்டுதான்

மின்இணைப்பு பெற்றேன் என்றால் சரிதான். நான் லூர்துக்கு கிடைத்த சொத்தைதான் பிரதிவாதி பெற்றுக்கொண்டார் என பிரச்சனை செய்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி இடமானது எனது கணவருக்கும், ஜானுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது. எனது மாமனாருக்கு லூர்து என்ற ஒருவாரிசு உண்டு என பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

4. எனது கணவர் சிறுவயதாக இருக்கும்போது லூர்து, ஜான் மற்றும் என் கணவர் இடையே பாகபிரிவினை நடைபெற்றது என்றால் சரியல்ல. அவரவர்கள் ஒவ்வொரு இடத்தில் வீடுகட்டிவிட்டனர், நடைபாதை அனுபவம் செய்துவருகிறோம். ஆணையர் வந்து ஸ்தல பார்வை செய்தாரா என்றால் சரிதான்.

5. கதவு எண்.12/134 என்பது எனது வீடு என்றால் சரிதான். எனது வீட்டிற்கு தெற்கே 12/133 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட வீடு என்றால் சரிதான். எனது வீட்டிற்கு கிழக்கு பார்த்தவாசல் உண்டா என்றால் உண்டு, பிரதிவாதிகள் எனக்கு பாத்தியப்பட்ட பாதையை அடைத்துவிட்டதால் கிழக்கு பார்த்தவாசல் வைத்துள்ளேன். ஆணையர் அறிக்கையில் மேற்குபார்த்து ஒருவாசல் இருந்ததாகவோ, அதை அடைத்ததாகவோ சொல்லவில்லை என்றால் சரியல்ல.

6. எனது வீட்டிற்கு தெற்கே பிரதிவாதியின் வீட்டிற்கு மேற்கு பார்த்தாசல் உள்ளதா என்றால் உள்ளது, அது தற்போது அமைக்கப்பட்டது. எனது வீட்டிற்கு வடக்கே கழிவறை உள்ளது என்றால் சரிதான். மேற்படி கழிவறை புறம்போக்கு நிலத்தில் உள்ளதாக ஆணையர் தெரிவித்துள்ளார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

7. கிழக்கே உள்ள முடுக்கு வழியாக தான் சென்றுவருகிறேன் என்றால் சரிதான், எனக்கு அருகாமையில் உள்ள நபர் இடம் கொடுத்ததால் அதை பயன்படுத்தி வருகிறேன். அதற்கு முன்பு மேற்கு பக்கம் உள்ள காலியிடம் வழியாக தான் சென்றுவந்தேன், மேற்படி இடமானது எனக்கும், பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட பொதுஇடமாகும்.

8. எனது பிராதில் வடக்கு எல்லையாக அரசு புறம்போக்கு நிலம் உள்ளதாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு தபசில் சொத்தின் சர்வே எண் தெரியாது. சொத்தை இரண்டாக பிரித்தால் தெற்குபாகம் எனக்கு பாத்தியப்பட்ட இடம் வரும். சாட்சி அழுதுகொண்டே சாட்சியம் அளித்தார். பிராதில் குறிப்பிட்டுள்ள கிழமேல் 10 அடி சுவரும், தென்வடல் சுவர் 10 அடியும், உயரம் 10 அடியும் கொண்ட சுவரை நான் ஊரில் இல்லாத சமயத்தில் கட்டியுள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆணையர் அறிக்கையில் துலங்காது என்றாலும் சரியல்ல.

9. பிராது சொத்தில் கூரை மற்றும் பார்க்கிங்கல் அமைக்கப்பட்டுள்ளது என்று ஆணையர் அறிக்கையில் உள்ளது என்றால் சரிதான், அதை பிரதிவாதிகள் தான் அமைத்துள்ளார்கள், தற்போது கூரை இல்லை, அதையும் இடித்துவிட்டு காங்கிரீட் கூரை அமைத்துவிட்டார்கள். எனது கணவர் ஜான் மீதும், லூர்து மீதும் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல.

10. நான் காவல்நிலையத்தில் 5ம் பிரதிவாதி மீது புகார் கொடுத்தேனா என்றால் சரிதான். அந்த புகார் மனுவில்

எனது இடத்திற்கு மேல்புறம் எனக்கு சுவர் பராமரிக் கஇடம் இருந்ததாகவும்,அதை 5ம் பிரதிவாதி தடுத்ததாகவும் புகார்கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரில் மேற்கே இடம் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்துள்ள வீட்டுத்தீர்வை, குடிநீர் ரசீதுகள் அனைத்தும் பிராது சொத்திற்குரியதல்ல, நான் குடியிருந்து வரும் வீட்டிற்குரியது என்றால் சரிதான்.

11. நான் தாக்கல் செய்துள்ள பட்டா, அடங்கல் எனது கணவரின் பெயரில் தனியாக இல்லை என்றாலும், கூட்டாக உள்ளது என்றாலும் சரிதான். எனது கணவர் பெயருக்கு தனியாக பட்டா இருந்தால் தான் எனது கணவருக்கு பாத்தியப்பட்ட இடம் எதுவென்று தெரியவரும் என்றால் சரிதான், பிரதிவாதி எங்கள் இடத்தை அளக்க விடமாட்டிக்கிறார்கள்.

12. எனது கணவர் மற்றும் எனது மாமனாரின் வாரிசுசான்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. லூர்தின் வாரிசுகளை விசாரித்தால் தான் பாகப்பிரிவினை நடைபெற்றதாக தெரியவரும் என்றால் சரியல்ல, அவர்களை விசாரித்தால் பிரதிவாதிக்கு ஆதரவாக தான் சாட்சியம் அளிப்பார்கள். தபசில் சொத்திற்கும், லூர்துக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. 18.10.1974ம் ஆண்டே லூர்து, தோபியாஸ், ஜான் ஆகியோர்கள் தபசில் சொத்தை பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல.

13. லூர்து தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை ஜானுக்கு கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. லூர்தின் வாரிசுகளை கட்சி சேர்க்காததால் எனது வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஜானின் வாரிசுகள் தபசில் சொத்தை 3ம் வாதிக்கு கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அந்தோணிக்கு 2 மனைவிகள் என்பதால் தபசில் சொத்தை இரண்டாக பிரித்தார்கள் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்து பாதி பங்கு லூர்துக்கும், மறுபாதி இரண்டாவது மனைவியின் வாரிசுகளுக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அம்பாசமுத்திரம் உரிமையியல் நீதிமன்றத்தில எனது கணவரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதில் 3ல் 1 பங்கு பாகம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.